பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

New Master Institute
B. M. C. Lane, JAFFNA
A/L 89
Saturday & Sunday
✶ PHYSICS ✶
திரு. வர்ணம்
அனுமதிகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன
புதிய பிரிவு ஆரம்பம்
JULY 2nd

# உதயன்

விலை ரூ 2/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

New Master Institute
B. M. C. Lane, JAFFNA.
A/L 89
Saturday & Sunday
✶ ZOOLOGY ✶
திரு. நாகநாதன்
8.30 சுவாசத் தொகுதி நடைபெறுகிறது.
11.30 நரம்புத் தொகுதி விரைவில் ஆரம்பம்

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸ்ரீ ஆனி மீ 09 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்ஜா பிறை 08 ( 23 – 06 – 1988 ) UTHAYAN- A lively Tamil Daily கதிர்: 113

# தமிழர் பிரச்சினை: தீர்க்கப் புதுவழி கூறுகிறார் சிவாஜி

## விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு பேசுவதற்கு இந்தியா ஏற்பாடு செய்ய வேண்டும்

சென்னை, ஜூன் 23

ஈழத்தமிழர் பிரச்சினையைத் தீர்க்க, திரு. சிவாஜி கணேசன் தலைமையிலான தமிழக முன்னேற்ற முன்னணி புதிய ஆலோசனை ஒன்றைத் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனும், ஏனைய போராளிகள் அமைப்புகளுடன் இலங்கை அரசு நேரடியாகப் பேசுவதற்கு, இந்தியா ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதே அந்தப் புதிய யோசனை ஆகும்.

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக திரு. சிவாஜி கணேசனும், அவரது கட்சிப் பிரமுகர்களும் இம்மாதம் பதினைந்தாம் திகதி சென்னைக் கடற்கரையில் உண்ணுவிரதம் இருந்தார்கள் அல்லவா?

அப்போது ஈழத் தமிழர் விவகாரம் தொடர்பாகச் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் ஒன்றிலேயே முன்கண்ட ஆலோசனை உள்ளது.

உண்ணுவிரத முடிவில் திரு. சிவாஜி கணேசன் பேசும்போதும் முன்கண்ட ஆலோசனையை வலியுறுத்தி இருந்தார்.

உண்ணுவிரதத்தின் போது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

★ இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடக்கும்வன்முறைச்செயல்கள் (யார் செய்தாலும்) உடனே நிறுத்தப்பட வேண்டும்.

★ இந்திய அமைதிப் படை சண்டை செய்வதை உடன் நிறுத்தி, போர் நிறுத்தம் அறிவித்து அமைதி காக்க வேண்டும். இந்திய அமைதிப்படை தமிழர்களை அடக்கப்பயன்படுத்தப்படக் கூடாது.

★ விடுதலைப் புலிகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அதன் தலைவர் பிரபாகரனுக்கு எந்த தீங்கும் இல்லாமல் அவர் உயிர் சாக்கப்பட வேண்டும்.

★ இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து மாகாணக் கவுன்ஸிலின் அதிகாரங்களைத் தீர்மானிக்க விடுதலைப் புலிகளின் தலைவர்கள் மற்ற தமிழ்ப் போராளிகள் அனைவரும் இலங்கை அரசுப் பிரதிநிதிகளை சந்தித்து நேரடியாக முடிவுகாண ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

★ இந்தியா தன்னுடைய இன்றைய நிலையை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசனுக்கு இதுவரை 4,231 அகதிகள்!

காங்கேசன்துறை, ஜூன் 23

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு தமிழ் நாட்டிலிருந்து இதுவரை 4,231 அகதிகள் வந்து சேர்ந்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதியிலிருந்து கடந்த 18ஆம் திகதி வரை 9 தடவைகளில் இந்த அகதிகள் வருகை தந்தனர்.

இதில் 3,214 பேர் வயது வந்தவர்கள், 1,027 பேர் சிறுவர்கள். இந்த அகதிகள் 2,252 குடும்பங்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ந்தும் அகதிகள் காங்கேசன்துறை வந்தடைவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-68)

## சிறிமாபுரவில் சிங்களவரை குடியேற்ற ஏற்பாடு நடக்கிறது

திருகோணமலை, ஜூன் 23

திருகோணமலை நகரிலுள்ள 'சிறிமாபுர' பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த சிங்கள மக்களை மீண்டும் அப்பகுதியில் மீளக் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முதற் கட்டமாக சென்ற 20 ஆம் திகதி அப்பகுதியைச் சேர்ந்த பல சிங்கள மக்கள் ஸ்ரீலங்கா பொலீஸாரின் பாதுகாப்புடன் சென்று தங்கள் வீடு வாசல்களைப் பார்வையிட்டுள்ளனர்.

அங்கு அனேக வீடுகள் சேதமடைந்திருப்பதாகவும் உடனடியாக அங்கு குடியேற முடியாமலும் இருக்கின்றதாம்.

வீடுகளைத் திருத்தி அமைப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டால் தாங்கள் மீண்டும் அங்கு குடியேற முடியும் என்று சிங்கள மக்கள் கூறியுள்ளனர் என அறியவந்தது. (ஓ-150)

### சுபநேரம்

23 – 06 – 1988
ஆனி – 9
வியாழக்கிழமை
சுபநேரம்:
07.25 முதல் 08.55 வரை
ராகுகாலம்:
01.25 முதல் 2.55 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## வடமராட்சிப் பேரணி: நாளை நடக்கும்

வடமராட்சி, ஜூன் 23

கடந்த செவ்வாய்க்கிழமை வடமராட்சியில் நடைபெற ஏற்பாடாகி இருந்து ஒத்திவைக்கப்பட்ட பேரணியும் பகிஷ்கரிப்பும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இந்தப் பேரணியின் முடிவில் பொதுக்கூட்டம் இடம்பெறும்.

வடமராட்சி மக்கள் அவையும், வடமராட்சி மீனவர் சங்கமும் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளன.

★ மீனவர்கள்மீதான சகல கட்டுப்பாடுகளையும் தளர்த்தி இரவிலும் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்படவேண்டும். கடல் வலயச் சட்டம் நீக்கப்படும்வரை சகலருக்கும் ஸ்ரீலங்கா அரசினால் வழங்கப்பட்டது போன்று பூரண நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

★ தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளை ஏற்படுத்தி உறுதியான அரசியல் தீர்வை ஏற்படுத்தல். போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்த பகிஷ்கரிப்பும்பேரணியும் நடைபெற இருக்கிறது.

வல்லை முத்துமாரி அம்மன் கோவிலில் இருந்து ஆரம்பமாகும் பேரணி பொலிகண்டி அமைதிப்படை முகாமில் மகஜர் கையளிப்பதைத் தொடர்ந்து நெடியகாட்டுப் பிள்ளையார் கோவிலின் முன்றலில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

அதேபோல சக்கோட்டையிலும், பருத்தித்துறைச் சிவன் கோவிலிலும் ஆரம்பமாகும் மற்றைய பேரணி பருத்தித்துறை அமைதிப் படை முகாமில் மகஜர் கையளிப்பதைத்தொடர்ந்து பருத்தித்துறை சிவன் கோவிலின் முன்றலில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

இதில் சகலரையும் பங்கு கொள்ளுமாறு துண்டுப்பிரசுரங்கள் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது, (ஓ – க – 160)

## ஜனவரி முதல் அதிகரிக்கப்பட்ட ஒய்வூதிய நிலுவையை இம்மாதம் பெறலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

ஜனவரி மாதம் முதல் அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கான நிலுவைகளை இம்மாத ஓய்வூதியத்துடன் சேர்த்துப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த நிலுவைகள் ஜூலை மாத ஓய்வூதியத்துடன் சேர்த்தே வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் யாழ் செயலக ஓய்வூதியப் பிரிவு ஊழியர்களின் முயற்சியால் இந்த ஓய்வூதிய நிலுவைகள் ஒருமாதம் முன் கூட்டியே வழங்கப்பட உள்ளன.

இந்தத் தகவலை ஓய்வூதியக் கிளை அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

1987ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### அந்த சிவஞானம் நானல்ல

ஆணையாளர் சிவஞானம் சொல்கிறார்

அறிக்கை 5 ஆம் பக்கத்தில்

## 9 இந்துக்கள் சுட்டுக் கொலை

புதுடில்லி, ஜூன் 23

பஞ்சாப் தீவிரவாதிகள் நேற்று மேலும் 9 இந்துக்களைச் சுட்டுக் கொன்றனர் என்று அறிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

### முச்சந்தி முரளி



தெற்கிலே துருப்புக்களைக் குவித்து, அதையும் ஒருபழைய வடக்கு ஆக்க நினைக்கிறரோ தர் மிஸ்டர்......!

## எகிப்து தேவாலய தீ விபத்தில் 40 பேர் பலி

கெய்ரோ, ஜூன் 23

எகிப்தில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் குறைந்தது 40 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் 30 பேர் குழந்தைகள் என்று தெரிவிக்கப்பட்டது.

தீவிபத்து ஏற்பட்டசமயம் சுமார் 5 ஆயிரம் பேர் குழுமியிருந்தனர்.

ஆலயத்தில் இருந்த காஸ் சிலிண்டர்கள் மின்சார ஒழுக்குக் காரணமாகத் தீப்பிடித்துக் கொண்டன. அதைத் தொடர்ந்து தேவாலய உள்மண்டபம் புகை மண்டலமாகியது.

கன்னி மரியாள் தேவாலயமான இதன் பத்து நாள் திருவிழா நேற்றுத் தான் ஆரம்பமானது. (ஓ-எ)

## தென் மாகாணத்துக்கு மேலதிகத் துருப்புக்கள்

கொழும்பு, ஜூன் 23

தென் மாகாணத்துக்கு மேலதிக துருப்புக்கள் நேற்றுமுன்தினம் அனுப்பப்பட்டன என்று அறிவிக்கப்படுகின்றது.

அம்பாந்தோட்டையில் பஸ் ஒன்று எரிக்கப்பட்டது, திக்வல்லையில் மாணவர் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது ஆகிய சம்பவங்களைத் தொடர்ந்தே கூடுதல் துருப்புக்கள் அனுப்பப்பட்டன என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையில், திக்வல்லைச்சம்பவத்தில் மாணவன் ஒருவன் உயிரிழந்ததற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் முகமாக கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மகாவித்தியாலய மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். (ஓ-எ)

## நேற்று இயங்கின

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். செயலகத்தின் அத்தியாவசியப் பிரிவுகளும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள், கிராம சேவகர் அலுவலகங்கள் என்பன நேற்றுச் செயற்பட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சிவில் நிர்வாக சீர்குலைப்பின் அடிப்படையில் பிரஸ்தாப அலுவலகங்கள் இயங்குவது தடைசெய்யப்படுவது தெரிந்ததே.

எனினும் மாதத்தின் இறுதி வாரத்தில் இயங்க அனுமதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். (ஓ-9)

## அமைச்சருக்கு ஒரு வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 23

ஓய்வூதியர்களுக்கும் புதிய வாழ்க்கைச் செலவுப்படி இவ்வாண்டு ஜனவரி முதல் வழங்கப்பட வேண்டும் என்று அகில இலங்கை ஆங்கில ஆசிரியர் சங்கம், அமைச்சர் மொண்டேகு ஜெயவிக்ரமாவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது, (ஓ-எ)

## வவுனியா வாடிவீட்டை சுற்றிவளைத்துத் தேடுதல்!

வவுனியா, ஜூன் 23

கடந்த திங்கட்கிழமை இரவு இந்திய அமைதிப் படையினர் தமக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து வவுனியா வாடிவீட்டைச் சுற்றிவளைத்துச் சோதனையிட்டனர். அப்போது அங்கு கடமையிலிருந்த வாடிவீட்டுப் பொறுப்பாளரையும் மற்றும் நால்வரையும் விசாரணைக்காகக் கூட்டிச்சென்றுர்கள்.

இதேவேளை இன்னொரு சம்பவத்தில் வவுனியா மாவட்டப் பிரசைகள் குழுவின் தலைவர் டாக்டர் எஸ். வி. பரராஜசிங்கத்தின் வீட்டிற்குச் சென்றவர்கள், தாங்கள் இந்திய அமைதிப்படையினர் என்றும் வீட்டைச் சோதனையிட வந்ததாகவும், கதவைத் தட்டி வீட்டாரை நித்திரையிலிருந்து எழுப்பிக் கூறியுள்ளார்கள்.

அப்போது வீட்டில் தனித்திருந்தடாக்டரின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் தடை: இளைஞர் சேவை மன்றம் முற்றாக ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாடுகள் இந்த வாரம் முதல் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் விதித்த தடை காரணமாகவே இந்த ஸ்தம்பிதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:-

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி-திசை திருப்புவதில் ஈடுபட்டு இளைஞரை தவறான வழியில் இட்டுச் செல்லும் ஸ்ரீலங்கா இனவாத அரசின் கைக் கூலியாகச் செயற்பட்டுவரும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தை தமிழீழத்திலிருந்து முற்றாகத் தடை செய்கின்றோம். தேசிய இளைஞர் சேவை மன்றத்தின்கீழ் செயற்படுவோருக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. (ஓ)

### ஹர்த்தாலுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 23

தென்மராட்சி மாணவர் ஒருங்கமைப்புக் குழு இன்று வியாழக்கிழமை ஹர்த்தால் அனுஷ்டிக்க ஏற்பாடு செய்திருப்பதாக துண்டுப் பிரசுரங்கள் மூலம் அறிவித்துள்ளது.

கடந்த மே மாதம் 24 ஆம் திகதி அமைதிப்படையின் சுற்றிவளைப்பின் போது உயிர் நீத்த விடுதலைப் புலிகளின் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சகல இயக்கங்களும் ஒன்றிணைய அழைப்பு

### ரெலோ விடுத்துள்ளது

வவுனியா, ஜூன் 23

சகல தமிழ் விடுதலை இயக்கங்களும் ஐக்கிய முன்னணி ஒன்றின் கீழ் இணைந்து செயற்பட முன்வர வேண்டும்.

இவ்வாறு தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ)பகிரங்கஅழைப்பு ஒன்றை விடுத்துள்ளது.

ரெலோ இயக்கத்தலைவர் திரு. ஏ. அடைக்கலநாதன் (செல்வம்) சார்பில் அதன் வன்னிப்பிராந்திய அரசியல் பொறுப்பாளர் கு. உதயன் கையெழுத்திட்டு அனைத்து இயக்கங்களுக்கும் இது சம்பந்தமான கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

விடுதலைப் புலிகள், ஈரோஸ், ஈ. பி. ஆர். எல். எவ்., ஈழம் தேசிய விடுதலை முன்னணி, புளொட் ஆகிய இயக்கங்களின் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேற்படி அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றிய அனைத்து இயக்கங்களையும் ஐக்கிய முன்னணி ஒன்றின் கீழ் செயற்பட தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) இருகரம் கொண்டு அழைக்கின்றது.

தற்போதைய கால கட்டத்தில் தமிழ் மக்களின் நன்மையை முன்னிட்டு எமது இக்கோ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு அதிர்வினல் ஆஸ்பத்திரிக்குச் சேதம்

மந்திகை ஆதாரவைத்தியசாலையின் கண்ணாடி ஜன்னல்கள், கூரை சீற் என்பன குண்டுவெடிப்பு அதிர்வினல் சேதமடைந்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை புலோலியில் வெடித்தகுண்டின் அதிர்வினலும், துகள்கள் பறந்ததாலுமே இந்தச் சேதங்கள் ஏற்பட்டன.

வைத்தியசாலையில் இறந்து வைக்கப்பட்ட எக்ஸ்-ரே அறையின் ஜன்னல் கண்ணாடிகள், வைத்தியர்களின்தங்கும் அறை ஜன்னல்கண்ணாடி கூரை சீற் மற்றும் சமையல் அறைச் ''சீலிங்'' கூரைகளும்பெருமளவில் சேதமடைந்தன.

இச்சம்பவம் இடம்பெற்ற போது சத்திர சிகிச்சை அறையில் சத்திரசிகிச்சை எதுவும் நடைபெறவில்லை. (ஓ-160)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சகல விதமான T.V றேடியோ, பூஸ்டர் அன்ரனு வயர் சுவர்க்கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள், மின் விசிறிகள், சைனு மின் அடுப்புகள், T.V ஸ்ராண்ட் றைஸ் குக்கர் மற்றும் எலக்றிக் வயறிங் பொருட்கள், பெற நாடுங்கள் New City Traders 135, Kasturiar Road, Jaffna (C5482)

பழைய செம்புபித்தளை அலுமினியம் உயர் விலைக்கு பெறப்படும். பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [4674]

பாவித்த வீட்டுத்தளபாடங்கள் மகாராஜா ஹோல் செற் நாஷனல் கறுப்பு, வெள்ளை T.V, கசற்றேடியோ, சாப்பாட்டு மேசை, கதிரை கட்டில், சியஸ்ரா மெத்தைகள், Oven சம்பளம் 12'X8' சைஸ் Show Case, கண்ணடி மேசை, புத்தகஅலுமாரி, சிறிய, பெரிய, கபேட், Fan மற்றும்பலபொருட்களும் மிகமலிவு விலையில் உண்டு. M. தியாகராஜா 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக்ஸ்சந்தியருகில்) (4458)

எம்மிடம் ஹொண்டா, C50, C90 HAO 2, C90, MD70, MB 5, RACOON GS 125, [new brand] CB-250 எலக்ரோனிக் மோட்டார் சைக்கிள்கள், பல நிறங்களில் மொத்தமாக அல்லது சில்லறையாக பெற்றுக்கொள்ளலாம். கோயில் பொருட்களும், பித்தளை, செப்பு, அலுமினியம், எவர்சில்வர் பொருட்களும் விநியோகஸ்தர்கள். ஸம்ஸ் மெற்றல்ஸ்ரோர்ஸ் 26/B மானிப்பாய் வீதி, கிளை 76/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [4671]

### SALE

English Standard Type - writer 18 inch carriage. contact Tharmaratnam 12, New Road Athiady Jaffna. (4690)

### TYPE WRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road Jaffna (Samy & Co Shabra அருகாமையில். (C5300)

### காணி விற்பனை

பெ. நாகலிங்கம் பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு என்ற முகவரியிலுள்ள காணியின் கிழக்குப் புறமாக 6 பரப்பு விற்பனைக்குண்டு. மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்: நா. சரஸ்வதி அம்மாள், 120, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (4693)

உரும்பராய் சந்தியிலிருந்து 50 யார் தூரத்தில் கோப்பாய் ரேட்டில் கடை கட்டக்கூடிய காணி ஒன்று (2½ பரப்பு) விற்பனைக்குண்டு உடன் தொடர்பு கொள்ளவும். K. சதானந்தம். C/o குணம் ரேடியோ சென்றர், 42 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (4692)

பிறவுண் வீதியருகே, குருநாதர் ஒழுங்கையில், சுற்றுமதில் கேற், கிணற்றுடன் கூடிய ஒரு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம். "சிவாஜி லஷ்மிஸ்" 19 (7) பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (4513)

### கோழிக்குஞ்சுவிற்பனை

Hisex Golden பிறவுன் சேவற் குஞ்சுகள் 24ந் திகதி வெள்ளிக்கிழமையும் 1மாத Golden comet பிறவுன் பேட்டுக்குஞ்சுகள் 25ந் திகதி சனிக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராசா பிறதர்ஸ் பிரம்படி கொக்குவில். (4697)

### தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல வியாபார ஸ்தாபனத்தின் கொழும்பு, வவுனியா, வடமராட்சிப் பகுதியில் ஆரம்பிக்கவுள்ள கிளை நிறுவனங்களிற்கு மனேஜர், லிகிதர், பெண்கள் தேவை. கல்வித்தகைமை G.C.E. A/L. விண்ணப்ப முடிவுத்திகதி 30. 6. 88 தொடர்பு: C/o 243, உதயன் யாழ்ப்பாணம். (4682)

சுன்னாகம் ஐயனார் கோவிலுக்கு மடப்பள்ளி வேலையும் பூசையும் தெரிந்த சைவப் பூசகர் தேவை. தொடர்பு: சி. ஐ. கந்தசாமி ஆதீனகர்த்தா. 26.6.88 அன்று காலை 9.00க்கு நேரில் வரவும். (4685)

தமிழ் ஆங்கிலம் தட்டச்சு செய்து கொடுக்கப்படும் விபரங்கட்கு திரு. அ. சோமாஸ்கந்தா 212, செம்மணி வீதி நல்லூர் யாழ்ப்பாணம். (4649)

இரண்டு பேர் உள்ள ஒரு குடும்பத்திற்கு திருநெல்வேலியில் ஒரு பகுதி வீடு (Anex) அல்லது சிறிய வீடு உடன் தேவை. தொடர்பு: C/o 245, உதயன், யாழ்ப்பாணம். (4694)

காரைநகர் பாலாவோடை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானத்திற்கு பூசை செய்வதற்கு ஓர் அனுபவம் வாய்ந்த குருக்கள் தேவை. மாத வேதனமாக ரூ. 1000 சம்பளமாக கொடுக்கப்படும். இருப்பிட வசதியும் கோவில் வரும்படியும் உண்டு. தொடர்பு கொள்ளவும்: ஆ.ச. ஆறுமுகம். (4689)

(Broiler) புரொயிலர் கோழிகள்தேவை. இருப்பவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இடம் அண்ணுபாம் இணுவில். (C5501)

1. 80 ஸ்ரீ இலக்கத்திற்கு பின் நல்ல நிலையில் உள்ள வெஸ்பா (Vespa) ஸ்கூட்டர் 2. நல்ல நிலையான மொறிஸ் மறிஞ (Morris Marina) அல்லது போட் எஸ்கோட் (Ford Escort) கார் தேவைதொடர்பு. J.P.T Ltd 3 மொடல் மார்கட் (மேல்மாடி) யாழ்ப்பாணம். (4695)

### வகுப்புகள்

க. பொ. த. (உ/த) தூய, பிரயோக கணித விஞ்ஞான கலை, வர்த்தக வகுப்புகள் நடைபெறுகின்றன. 1989 பிரிவிற்கான காவிகள் (VECTORS) வெள்ளி 24-6-88 காலை 6.30 இற்கு ஆரம்பமாகின்றது. காவிகளும் அதன் பௌதிகப் பிரயோகங்களும் ஆகிய படிமுறைப் பயிற்சி நூல் விரைவில் வெளிவரவுள்ளது. ஆசிரியர் திரு. துரையப்பா Shamrock Academy Chundikkuli. (4687)

ICMA/ AAT I. A. B/ Computer/ Programing வகுப்புகள் இப்பொழுதுதான் ஆரம்பமாகியுள்ளன. School of Business Administration 16, 3ம் குறுக்குத் தெரு, [O.L.R தேவாலயத்திற்கு மேற்குப் பக்கம் யாழ்ப்பாணம். (C5468)

### கலர்ப்படம்

உங்கள் கலர்ப்படச் சுருள்களை மைக்கிரோ கொம்பியூட்டர் மூலம் கொழும்பு - சிங்கப்பூர் ஆகிய இடங்களில் பிரதி செய்ய விரும்புகின்றீர்களா? Processing இலவசம் பிரதி P.C 4/50 Only Processing 25/- தரமாகவும் விரைவாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள. கொழும்பு ஸ்ருடியோ யாழ்ப்பாணம். (C/4910)

### மணப்பெண் தேவை

யாழ்ப்பாண நாடார் இன கனடாவில் இருந்து வந்த மணமகனுக்கு 30 வயதிற்கு உட்பட்ட இந்து மணப்பெண் தேவை. யாழ்ப்பாண கத்தோலிக்க அரசாங்க உத்தியோகத்தருக்கு 30 வயதுக்கு உட்பட்ட மணப்பெண் தேவை. எம்மிடம் எல்லாச் சாதி சமயத்திலும் மணமக்கள் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி சொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (4453)

### அறிவித்தல்

புத்தூர் பொலிஸ் பொது மக்கள் நல்லுறவுச்சபை தலைவராக இருந்த திரு. சி. மாணிக்கவாசகர் ஆகிய நான் சுகவீனம் காரணமாக இப்பதவியில் இருந்து ராஜினாமாச் செய்துள்ளேன். உடையார் வளவு, புத்தூர். (4514)

### வினாத்தாள்வகுப்புகள்

5ம் 9ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான வினாத்தாள் வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. ஆண்டு 5 செவ்வாய், புதன், ஞாயிறு பிற்பகல் 4.30 மணி. ஆண்டு 6 செவ்வாய், புதன், ஞாயிறு பிற்பகல் 5.30 மணி. வினாத்தாள்கள் அச்சடித்து வழங்கப்படும். ஆண்டு 3 தொடக்கம் ஆண்டு 11 வரை சற்பிக்கப்படுகின்றன. புதிய கல்வி நிலையம் கெங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக, யாழ்ப்பாணம். (4688)

---

வேகமாக விற்பனையாகின்றது

# ஆக்கம் விலை ரூபா 7-50

க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு பயன்தரக்கூடியது.

இந்த இதழில்

1. இலங்கை அரசிறையில் இறக்குமதி வரிகளின் சார்பளவான பங்களிப்பு.
   யாழ். பிரபல ஆசிரியர்
   திரு. என். கிருஷ்ணனந்தன்
2. விஞ்ஞானத்தில் அவதான முறைகளும் அவற்றின் பயன்களும்.
3. நெடுநல்வாடை.
4. உபநிடதச் சிந்தனை
5. வலுவேறுக்க கோட்பாடும் நடைமுறையும்.
6. பொருளியலில் சில சோடிச் சொற்கள்.
7. செய்முறைப் புவியியல் - ஆரம்பப் புள்ளி விபரவியற் பிரயோகம்.

G. A. Q. தமிழ்பாட மாணவர்களுக்கு

**சிலப்பதிகாரம்**

கடலாடு காதை
கானல்வரி உரைக்குறிப்புடன்.

**கம்பராமாயணம்**
**வாலிவதைப் படலம்**
விலை ரூபா 19-50

வெளியீடு :
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C4944)

---

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் ஆனி 11ஆம் திகதி (25-6-88) சனிக்கிழமை முற்பகல் 10-33 தொடக்கம் 1-25 வரையுள்ள சுபவேளையில்

எமது புத்திரன்
திருநிறைசெல்வன்
**ரவீந்திரன்**
அவர்களுக்கும்

எங்கள் புத்திரி
திருநிறைசெல்வி
**கமலேஸ்வரி**
அவர்களுக்கும்

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் திருமணம் செய்யத் திருவருள் கூடியிருப்பதால், தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்கும்படி அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்: மணமகன் இல்லத்தில் 26-6-88 ஞாயிறு பிற்பகல் 3-30 — 5-30 வரை.

தங்கள் நல்வரவை நாடும்:

நாதஸ்வர வித்துவான்
P. S. பிச்சையப்பா தம்பதிகள்,
259, பருத்தித்துறை வீதி,
சங்கிலியன் தோப்பு,
நல்லூர்.

தவில் வித்துவான்
K. நாகையா,
குடும்பத்தினர்,
மாவிட்டபுரம்.

(4814)

---

வெளிவந்துவிட்டது!

## லங்கா ராணி

அருளர்

(இரண்டாம் பதிப்பு)
ஈழப் போராட்டத்தின்
சரித்திரச் சம்பவங்களை
நாவலுருவில் வெளிக்கொணர்ந்த
முதலாவது படைப்பு

வெளியீட்டாளர்கள்: வெளியீட்டுக்குழு
ஈழப்புரட்சி அமைப்பு ( EROS )

கிடைக்குமிடம்:

பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம். (4595)

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
11- 10- 1962

தாயக மண்ணில்
10- 05- 1988

வீரவேங்கை ரவாஸ்

(செ. ரஸ்வரஜீவா, புத்தூர் கிழக்கு)

எம் மண்ணுக்காக மரணித்த மாவீரனே,
செந்தமிழர் சிந்தும் இரத்தத்தால்
சிவந்து கொண்டு இருக்கும்
தமிழீழ மண்ணை மீட்டெடுக்க
சுதந்திர தமிழீழக் கொடியை
எம் தாயகத்து மண்ணிலே பறக்க விட
மறு பிறப்பெடுத்து போராட
இம்மண்ணிலே நீ மறுபடியும் பிறக்க
வேண்டும்

இது தான் எமது பிரார்த்தனை


பெற்றோரும், மற்றோரும்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

(4810)

---

## அந்தியேட்டி அழைப்பிதழ்



வல்வெட்டித்துறை
திரு. சி. வே. சிவசுப்பிரமணியம்

அன்புடையீர்


மேற்படி திரு. சிவசுப்பிரமணியம் அவர்களின் அந்தியேட்டியும்-வீட்டுக் கிருத்தியமும் 24-6-88 வெள்ளிக்கிழமை அன்னாரின் வீட்டில் நடைபெற இருப்பதால் உற்றார் உறவினர்- நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (சூழ்நிலை காரணமாக தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்ப முடியாமையையிட்டு வருந்துகின்றோம்)

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

ராஜா ஸ்ரோர், யாழ்ப்பாணம்.
சுப்ரமணியன் சோடா சம்பனி,
வல்வெட்டித்துறை. (4819)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர்

## வேலுப்பிள்ளை நகுலேஸ்வரன்

[ கப்டன் நகுலன் ]

தமிழர்தம் தாகம் தீர்க்க சேயாய் உதித்தது : 30 - 11 - 1966

வன்முறையோர் கைதவறத் தன்னை அழித்தது : 24 - 05 - 1988

செந்தமிழ் ஈழம் காக்க எம்
சொந்த நல் மண்ணைக் காக்க
வந்த எம் புதல்வா நகுலா
நீ சென்ற இடம்தான் ஏதோ?

"எங்கள் மக்களைக் காத்திட ஆயுதம்
ஏந்துவேன் நான் மீளவும்"
— கப்டன் நகுலன் —

23-06-1988

(4805)

தென்மராட்சி
மாணவர் ஒருங்கமைப்புக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்தநாள் வாழ்த்து



செல்வி மதுரா [23 - 06 - 1985] செல்வன் இராகுலன் [23 - 06 - 1987]

[illegible] மதுரா தனது [illegible] வது பிறந்த [illegible] இராகுலன் [illegible] பிறந்தநாளையும் இன்று (23-06-1988) வியாழக்கிழமை தமது இல்லத்தில் கொண்டாடுகிறார்கள்.

இவர்களை அப்பா, அம்மா, பேரன்மார், பேத்திமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார் [illegible] சித்தப்பா, மாமா, சித்திஆகியோர் [illegible] அருள்வேண்டிப் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

'செல்வ [illegible]' [illegible] சந்தோஷ. (4-05)

## பிரயாண ஒழுங்குகள்

### சவூதி அரேபியா

| | | |
|---|---|---|
| கிளீனேர்ஸ் | — | 350+100 SR |
| காப்பெண்டர் | — | 600+100 SR |
| மேசன் | — | 600+100 SR |
| மெக்கானிக் | — | 600+100 SR |

முற்பணம் அறவிடப்படமாட்டாது

- பிரயாணம் மேற்கொள்ள எம்மிடம் கடவுச்சீட்டு தந்தவர்கள், விசா வந்து எம்மால் குறிப்பிடும் திகதியில் பிரயாணத்தை மேற்கொள்ளாவிடின் கடவுச்சீட்டு திருப்பி ஒப்படைக்கப்படமாட்டாது.

நம்பிக்கையுடன் பிரயாணம் செய்ய இன்றே தொடர்பு கொள்க:

தலைமையகம்:

**கோல்டன்ரவல்ஸ் & ரூர்ஸ்**

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

கிளைகள்:

[1] **கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**

மயிலங்காடு, ஏழாலை.

[2] **கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**

நாவலர் சனசமூக நிலைய அருகில் உடுப்பிட்டி,

[24-ஆம் திகதி முதல் இயங்கும்]

[C-2948]

காரைநகர் வடக்கில்

# உபமின் நிலையம் நிறுவப்பட்டும்

# மின்சாரம் இல்லை

ஊர்காவற்றுறை ஜூன் 23

காரைநகர் வடக்கு பிரதேச சபை உப அலுவலக எல்லைக்குள் புதிதாக அமைக்கப்பட்டுள்ள [illegible] உப மின் நிலையத்திலிருந்து இதுவரை மின் விநியோகம் வழங்கப்படவில்லை. இது குறித்து இப்பகுதி மின்பாவனையாளர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபரினால் பண ஒதுக்கீடு செய்யப்பட்டு இலங்கை மின்சார சபை [illegible] பகுதியில் உப மின் நிலையம் அமைக்கப்பட்டதாகவும், உப மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் வழங்க ஏதுவாக அனைத்து வேலைகளும் பிரதேசசபை மின்சாரஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், ஆனால் இதுவரை மின் விநியோகம் சீர் செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி இப்பிரதேச மின்பாவனையாளர் ஒருவர் ''உதயனுக்கு'' விவரம் தருகையில் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையினால் செலுத்தப்படவேண்டிய நிலுவைப் பணம் இதுவரை மின்சார சபைக்கு அனுப்பி வைக்கப்படாத காரணத்தினால்தான் மின்சார விநியோகம் செய்வதில் மின்சார சபை தாமதத்தைக் கடைப்பிடிப்பதாகவும், இந் நிலுவைப் பணம் செலுத்தப்பட்டதும் உடனடியாக மின் விநியோகம் [illegible] செய்யப்படும் என [illegible] உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (இ - 16)

## விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கைக் கடன்

சாவகச்சேரி, ஜூன் 23

முன்னர் கடன்பெற்று இறுப்புச் செலுத்தாத விவசாயிகளுக்கும் ஏனைய விவசாயிகளுக்கும் நீண்டகால அடிப்படையில் குறைந்த வட்டியில் பயிர்ச்செய்கை கடனுதவி வழங்கப்பட உள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக விவசாயிகள் தாம்பெற்ற விவசாயக் கடன்களைத் திருப்பிச் செலுத்தமுடியாத நிலையில் உள்ளனர்.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் மீண்டும் தமது தொழிலை ஆரம்பிக்கும் பொருட்டு அரசாங்கம் பல சலுகைகளை வழங்க முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் விவசாயக் குடும்பம் ஒன்றுக்கு 2000 ரூபா நிவாரணமாக வழங்கப்படும்.

எனவே விவசாயிகள் தங்கள் கிராமபயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களை அணுகி இச்சலுகைகளைப்பெறும் தகுதிக்குரிய விவசாய அறிமுக கார்ட்டுகளைப் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (சி-12)

## யாழ் மாவட்டத்தில் ஆசிரியர் பற்றுக்குறை

மானிப்பாய் ஜூன் 23

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆசிரியர் பற்றுக்குறை அதிகரித்துள்ளது.

பாலர் வகுப்பு ஆசிரியர்கள் பலர் இளைப்பாறியுள்ள வேளையில் அவர்களுக்கான வெற்றிடங்களுக்கு புதிய ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

அத்துடன் கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக இறந்தவர்களும் காணாமல் போனவர்களும் பலர்.

அவர்களின் வெற்றிடங்களும் நிரப்பப்படவில்லை.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆங்கில ஆசிரியர்களுக்கு மிகுந்த தட்டுப்பாடு நிலவுவதாக தெரியவருகின்றது.

மானிப்பாய் வட்டாரத்தில் 253 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாது உள்ளன என அறியப்படுகின்றது.

ஆங்கில ஆசிரியர்கள் 35, விஞ்ஞான, கணித ஆசிரியர்கள் 21, கலைப் பட்டதாரி ஆசிரியர்கள் 26 ஏனைய விசேட பாடசாலை ஆசிரியர்கள் 171 ஆகியோர் மானிப்பாய் வட்டாரத்துக்கு தேவைப்படுகின்றனர் என அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (சி-90)

## மீண்டும் தொலைபேசி இணைப்பு

வட்டுக்கோட்டை, ஜூன். 23

நீண்ட காலத்துக்குப் பின் யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளருக்கு கொழும்புடன் நேரடித் தொலைபேசித் தொடர்பு வழங்கப்பட்டுள்ளது. (இ-161)

## சம்பள உயர்ச்சி இல்லை

யாழ்ப்பாணம், ஜூன். 23

இவ்வருட முற்பகுதியில் இருந்து அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்ச்சியை யாழ். கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், ஊழியர்கள் பலர் இன்னமும் பெற்றுக்கொள்ளவில்லை என்று தெரியவருகிறது.

யாழ். மாவட்டத்தில் யாழ். கல்வித் திணைக்களமே தடையின்றித் தொடர்ந்துஇயங்குவது குறிப்பிடத்தக்கது.

## நினைவுக்கல்

குருநகர், ஜூன். 23

கல்லுண்டாய், ஆனைக்கோட்டை வீதிச் சந்தியில் அக்டோபர் மாத அசம்பாவிதங்களின் போது கொல்லப்பட்ட பதினேழு அமைதிப் [illegible] நினைவுக் கல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (ஒ-51)

## பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி கு. அஷரா

காங்கேசன்துறையைச் சேர்ந்த குலசேகரம், [illegible] தம்பதிகளின் செல்வப் புதல்வி அஷரா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (23-6-88) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். அவரை [illegible] செல்வங்களுடனும்நீடுழிவாழ்கவென அப்பா அம்மா, உறவினர்கள் வாழ்த்துகின்றார்கள் (4624)

## பதவி வெற்றிடம்

புங்குடுதீவு - நயினாதீவு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

1. கிளை மேற்பார்வையாளர் தரம் II

   கல்வித் தகைமைகள்:

   க. பொ. த. ப (சாதாரண தரம்) 6 பாடங்களில் சித்தி,

   கூ. பயிற்சி த. பத்திரம் ( '' ) சித்தி மேற்படி பதவியில் 2 வருட அனுபவம்.

   வயதெல்லை – 22 - 35

   சம்பளத் திட்டம் 300-540 / 15X12-20X3 இதர படிகளும்.

2. தட்டெழுத்தாளர் - தமிழ்

   கல்வித் தகைமை:

   க.பொ.த.ப. (சாதாரண) 6 பாடங்கள் சித்தி. அத்துடன் தமிழ் தட்டெழுத்து சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

   தட்டெழுத்து வேகம் நிமிடத்திற்கு 30 சொற்கள்.

   வயதெல்லை – 18 - 30

   சம்பளத்திட்டம் 225 – 395 / 10X7 - 12.50X8 இதர படிகளும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 05. 07. 1988. விண்ணப்பங்கள் 'பொது முகாமையாளர் புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கம். புங்குடுதீவு' என்ற விலாசத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்.

(C4949)

## குதூகலத் திறப்புவிழா

கோல்டன் ரவல்ஸ்! கோல்டன் ரவல்ஸ்!!

வல்வெட்டித்துறை, வல்வெட்டி, உடுப்பிட்டி, கெருடாவில், தொண்டமானாறு, நெல்லியடி, கரவெட்டி, அல்வாய் மக்களின் வசதிக்கேற்ப எமது கிளைஸ்தாபனம் உடுப்பிட்டி சந்திக்கருகாமையில் (நாவலர் சனசமூக நிலையத்திற்கு அருகாமையில்) வெள்ளிக்கிழமை 24-06-88 காலை திறந்து வைக்கப்படும்.

நம்பிக்கையுடன் துரிதகதிப் பிரயாணம் செய்ய உடன் தொடர்பு கொள்க

**கோல்டன் ரவல்ஸுடன்**

(C 4947)

## கொம்பியூட்டர் பயிற்சி

யாழ்நகரில்!!

**Diploma in Computer Programming in BASIC & COBOL COURSE.**

புதிய 2ஆம் பிரிவுகள் ஆரம்பம்:

25-06-88 (9.30WeekEnd Batch) SAT & SUN

27-06-88 (9.30 Week Day Batch) MON & FRI

- ★ கூடிய நேரச் செய்முறைப் பயிற்சி IBM - PC SUPER / XT Computer உட்பட பல Computer களில் வழங்கப்படும்.
- ★ File Handing Project Work அடங்கலாக பல வேலைகளுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- ★ சலுகைத் தவணைக் கட்டணம் Rs 400/- மட்டுமே.

Administrative Branch

**IDP**

**INSTITUTE OF DATA PROCESSING**

342, K. K. S Road (சிவன்கோவிலடி)

**யாழ்ப்பாணம்**

குறிப்பு: தெல்லிப்பளை கிளையில் 25-06-88 (12.30 pm) அலுவலகர்களுக்காகவும், பல்கலைக்கழக மாணவர்களுக்காகவும் Week end சிறப்பு பிரிவு ஆரம்பமாகிறது. (C4932)

## பெற்றோர்களுக்கு ஓர்நெசற்ய்தி

உங்கள் பிள்ளைகள் புலமைப் பரிசில்பரீட்சையில் சித்தியடைய வேண்டுமா? முன்னணி பாடசாலைகளில் இடம்பெற வேண்டுமா?

**ஓர் அரிய சந்தர்ப்பம்**

புலமைப்பரிசில் பரீட்சை புத்தக வெளியீட்டாளர்களான அஸ்ரன் பதிப்பகம் ஆரம்பிக்கும் ஓகஸ்ட் 14ம் திகதி நடைபெறவுள்ள

**ஆண்டு 5**

**புலமைப்பரிசிற் பரீட்சைக்கான**

**1½ மாத துரித பயிற்சி வகுப்புகள்**

பாடங்கள்: **தமிழ், கணிதம்**

- ★ யாழ்நகரில் திறமைவாய்ந்த ஆசிரியர்களின் இணைந்த சேவை.
- ★ நாளாந்தம் அச்சடித்த பயிற்சிகளும் செய்முறைகளும்.
- ★ வார நாட்களில் (5 நாட்கள்) பிற்பகல் 3 — 5 மணிவரை
  ஜூலை 11-ம் திகதியின் பின் மு.ப. 9 — 12 மணிவரை

**ஆரம்பம்: 4-7-88**

விபரங்களுக்கு பெற்றோர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**அஸ்ரன் இன்ஸ்ரியூட்**

166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ம் மாடி)
(C 4934)

## வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

**Computer Programming in Basic Language**

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

சனி, ஞாயிறு வகுப்புகள்: 25-06-88- பயிற்சிக் காலம் 2 மாதம்
திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்: 01-07-88

பயிற்சிக் காலம்: 40 நாள்

கட்டணம்: 750/- மாத்திரம் (இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி I·B.M. (Compatable) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு நாள்: 24-06-1988

**UNICO COMPUTER CENTRE**

No. 5, மின்சார நிலைய வீதி, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(உப தபாற் கந்தோர் அருகாமையில்)

(C 5458)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## குவைத் வேலை வாய்ப்பு

★ – குவைத் ஹார்பரில் வேலை செய்வதற்கு 30 பேர் உடனடியாக தேவை.
★ – சம்பளம் 40 குவைத் டினார் + O. T.
★ – மிகவும் குறைந்த கட்டணம்.
★ – 24ம் திகதி கொழும்பு போகவேண்டி இருப்பதால் உடன் தொடர்பு கொள்ளவும்.

**சிவா**

6/2, மணிக்கூண்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
(ராஜசூரியர் பெட்ரோல் நிலையம் முன்பாக)
எமது கொழும்பு முகவர்:

**கோன்ஸ்ட்ரக்சன் அன் டெவலப்மென்ட் கம்பெனி**

நுகேகொடை (4644)


# கிளிநொச்சி ஆஸ்பத்திரிகள் அனைத்தும் திருத்தப்படும்

## ரூ.6லட்சம் ஒதுக்கீடு

கிளிநொச்சி, ஜூன் 23

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து ஆஸ்பத்திரிகளும் சுமார் ஆறு லட்சம் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்படும்.

இதற்கான நிதி பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதியிலிருந்தும், சுகாதார திணைக்களத்திலிருந்தும் புனர்வாழ்வுத் திட்ட நிதியிலிருந்தும் ஒதுக்கீடு செய்யப்படும்.

இந்த நிதியிலிருந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வைத்திய நிபுணர் விடுதியைத் திருத்த சுமார் 30 ஆயிரம் ரூபாவும், மலசலகூடத்தைத் திருத்தி அமைக்க சுமார் 25 ஆயிரம் ரூபாவும், வைத்தியசாலை வளவு வீதிதிருத்த வேலைகளுக்கு 25 ஆயிரம் ரூபாவும், மதில்கட்ட 33 ஆயிரம் ரூபாவும் செலவிடப்படும்.

தருமபுரம் பிரசவ வைத்தியசாலை திருத்த வேலைகளுக்கு சுமார் 50 ஆயிரம் ரூபாவும், உருத்திரபுரம் பிரசவ வைத்தியசாலைத் திருத்தவேலைக்கு 25 ஆயிரம் ரூபாவும், கண்டாவளை மருந்தக திருத்த வேலைக்கு 30 ஆயிரம் ரூபாவும், வட்டக்கச்சி மருந்தகம் திருத்த வேலைக்கு 10 ஆயிரம் ரூபாவும் பளை கிராமிய வைத்தியசாலைக்கு 25 ஆயிரம் ரூபாவும், பூநகரி வைத்தியசாலைக்கு 30 ஆயிரம் ரூபாவும், வேரவில் மருந்தகத்துக்கு 35 ஆயிரம் ரூபாவும், முழங்காவில் மருந்தகத்துக்கு 15 ஆயிரம் ரூபாவும், இரணைதீவு மருந்தக திருத்த வேலைக்கு 50 ஆயிரமும், அக்கராயன் வைத்தியசாலைக்கு 40 ஆயிரம் ரூபாவும், பளை பல்வைத்திய சாலைக்கு 55ஆயிரம்ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது: (இ-76)

## மக்கள் முகம்

### மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபை

யாழ்ப்பாணம் ஜூன் 23

கொக்குவில் ... மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபைக்கு பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. இ. பொன்னம்பலம்.

உப. தலைவர்:- ... சோமசுந்தரம்.

செயலாளர்:- ... சுப்பிரமணியம்.

உப. செயலாளர்:- இ. இராசலிங்கம்.

பொருளாளர்:- சி. தேவகந்தாலிங்கம்.

(இ)

### பொதுக்கூட்டம்

கந்தர்மடம் ஜூன் 23

தெல்லிப்பளை ... நாளை ... பொதுக்கூட்டம் ஞாயிறு 10-ஆம் திகதி நடைபெறும் ... அறிவிக்கப்படுகிறது.

(இ-68)

### பகலிலும் எரியும் மின் விளக்குகள்

கோப்பாய், ஜூன். 23

கோப்பாய் வடக்குப் பகுதியில் உள்ள வீதி மின் விளக்குகள் இரவு பகலாக தொடர்ந்து எரிந்துகொண்டிருக்கின்றன. (இ-72)

## ஈராண்டு நினைவஞ்சலி



**திரு. முருகேசு சுபதி**

(முன்னாள் பிரதம கணக்காளர் சுங்கத் திணைக்களம்.)

**திதி: 23—06—88**

இரண்டு ஆண்டாயிடினும்
புரண்டு விழும் எங்கள் உள்ளம்
அழுது மனம் ஆறவில்லை
அதை எழுதிடவோ முடியவில்லை
வாழவைத்தீர் கோபுரமாய்
ஆழப்பதித்தீர் அன்புதனை
காலத்தில் நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை
ஞாலத்தில் அழியாக் கோலமதாய்
எங்கெங்கும் புகழ்மணம் வீசி
என்றென்றும் சுடர் விட்டெரியும்.

தங்கள் ஆத்ம சாந்தியை
வேண்டி நிற்கும்:

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெருமக்கள்,
உடன்பிறவாச் சகோதரர்கள்.

இலக்குமிகரம்
உடுவில், சுன்னாகம். (4520)

## 6ஆம் மாத கண்ணீர் பூக்கள்



**அஜந்தி அன்ட்றூ**

| தாயின் மடியில்: | தாயக மண்ணில்: |
|---|---|
| 01 - 07 - 1969 | 23 - 12 - 1987 |

மொட்டு நீ விரியும் போதினிலே
முகத்தின் அழகு பொலிகையிலே
மனம் நிறைந்த மலரே! எம் மகளே!
மண்மீட்கும் உணர்வு உதித்ததுவே.
மாயமாய் எமைப் பிரிய மனம் வந்ததுவோ?
உள்ளம் துடிக்குதம்மா உதிரம் கொட்டுதம்மா
நீங்காத் துயில் நீங்கி நித்திய ஒளி நீ பெற
நிமலனை வேண்டுகின்றோம்.

அன்பு அப்பா, அம்மா, தங்கை
(4447) உறவினர், நண்பர்கள்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி அந்தியேட்டிக் கிரியையும் சபிண்டீகரணமும் 23-06-1988



**கந்தர் சிவலிங்கம்**

(வட்டுக்கோட்டை–இலுப்பையடி அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான முதல்வரும் ஓய்வுபெற்ற அதிபரும்)


அன்னையின் மடியில் 13–08–1924
அம்பாள் பாதங்களில் 24–05–1988

எங்கள் இதயத்தில் ஒளிர் விட்டு மிளிரும் குல விளக்கே, உங்கள் ஒளிவீசும் கண்கள் எங்கே! உங்கள் புன் சிரிப்பும் எங்கே! ஆயிரம் கதை சொல்லும் மௌனங்கள் எங்கே! உங்கள் ஆத்மா சாந்திக்காக அம்பாளை வேண்டுகின்றோம்.

மேற்படி கிரியைகளில் 23–06-1988 வியாழக்கிழமை கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டு கிழக்கு, சித்தன்கேணி. மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(4629)

## அரை ஆண்டு நினைவஞ்சலி



**திரு. சி. செல்லத்துரை**

(மேற்பார்வையாளர், யாழ். அரசினர் வைத்தியசாலை)

| பாரின் மடியில்: | பாதகர் பிடியில்: |
|---|---|
| 09 – 02 – 1937 | 21 – 12 – 1987 |

வேலைக்குப் புறப்பட்டீர்
காலையிலே!
தேனீரைக் குடித்துவிட்டு
மாலையிலே!
துடித்திட்டோம் நாம் அந்த
வேளையிலே.
துட்டர்களின் துப்பாக்கி
துளைத்ததினால்.
அரையாண்டும் முடிந்ததே
அடிவயிறும் எரிகிறதே
மகளுக்குத் திருமணத்தை
மணவறையில் நடத்திவைக்க
மருமகனை வரவழைத்தீர்.
வரவிற்காய் வழிபார்த்த
உன் விழிகள்,
வருமுன்பே விழிசொருகி
வாடிடவும் வைத்தனரோ?
தொழிலினையே சேவையென்று
செய்துவரும் வேளையிலே
பதவியிலே உயர்வுபெற்று
படிப்படியாய் உயர்கையிலே
பார்த்திருந்த பாதகர்கள்
படுகுழியில் தள்ளியதால்
பதறித் துடிக்கின்றோம்
அப்பாவே......! இப்புவியில்!

இங்ஙனம் பிரிவால் துடிக்கும்

மனைவி : **தவமணிதேவி**
பிள்ளைகள் : **ஜெகதீஸ்வரி, ஜெயந்தி** [தெ.ப.நோ.கூ.ச.,கோப்பாய்] **ஜெயஸ்ரீ, ஜெயகாந்தன், ஜெயரூபன்,**
**மருமகன் : ரவி** [இத்தாலி]

'ஈஸ்வரி வாசம்'
உரும்பராய் மேற்கு. [4502]

## 2ஆவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
24 – 07 – 1922

உதிர்வு
15 - 07 - 1986

திதி:
23 – 06 – 1988

**திருமதி நாகரத்தினம் சிவராஜா**

அன்பின் சிகரமாய் எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் பாசத்தின் உறைவிடமாய் எம்மை வழிநடத்திய அன்புத் தெய்வமே' எங்கள் அனைவரையும் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு சென்றீர்கள், வருஷம் இரண்டு தான் கடந்தாலும் உங்கள் நினைவு என்றென்றும் எமது இதயத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை தாழ்பணிந்து வேண்டுகின்றோம்.

என்றென்றும் உங்கள் பிரிவால் துயருறும்,

**T. சிவராஜா**

'ஈஸ்வரி வாசா'
நவாலியூர் (4809)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**திரு. இளையதம்பி செல்லப்பா**

(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 19– 6- 1916 | 26- 5- 1988 |

அன்பின் திருவுருவாய் 'அறிவின் சுடரொளியாய் பண்பின் உறைவிடமாய் எங்கள் எதிர்கால வாழ்விற்கு நல் வழிகாட்டியாய் இருந்து அணைந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும் அவ்வேளை 25-6 88 சனிக்கிழமையன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மகேஸ்வர பூசையிலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

மனைவி: திருமதி செ. செல்வராசு
மகள்: திருமதி கி. அருந்தவராணி
மகன்: திரு. செ. அருந்தவராசா (கனடா) (முன்னைநாள் சிறுப்பர் கிளிநொச்சி கச்சேரி)
மகள்: திருமதி சு. அருந்ததி
மகள்: செல்வி செ. சாவித்திரி
மருமகன்: இ. கிருஷ்ணர் (M. L. T. இரத்த வங்கி கொழும்பு)
மருமகள்: அ. நிரஞ்சனாதேவி (கனடா)
மருமகன்: வீ. சுந்தரலிங்கம் (விவசாயத் திணைக்களம் திருநெல்வேலி)
சகோதரன்: இ. இராஜதுரை (இளைப்பாறிய வருமானவரி மதிப்பீட்டாளர்)
சகோதரி: ச. இராசமணி
மைத்துனர்: மு. துரைசிங்கம் (இளைப்பாறிய) பொலிஸ் சார்ஜன்ட்

இணுவில்
... வடக்கு. (4811)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 31-01-1903 | 25-05-1988 |

**அமரர் அருட்பிரகாசம் சபாரத்தினம்**

அன்பாய், பண்பாய், பாசமாய் எம்மையெல்லாம் வளர்த்து, வையகத்தில் நற்பிரஜைகளாய் உலாவ விட்ட அன்புத் தெய்வமே! எம் வாழ்வில் ஒளிவிளக்காய் ஒளி தந்து இறைவனடி சேர்ந்து விட்ட உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பல வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் வருகை தந்தோர்க்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் 24–6–88 (வெள்ளிக்கிழமை) அன்று ஊறணி மடத்தில் நடைபெறும் அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகளிலும் வீட்டில் நடைபெறும் சபிண்டீகரணத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்.

நடராஜா வீதி,
வல்வெட்டித்துறை. (4504)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

விடுமாற்றம் வேந்தர்க்கு
உரைப்பான் வருமாற்றம்
வாய்சோரா வன்கணவன்

**பொருள்:**

குற்றமான சொற்களை வாய் சோர்ந்தும் சொல்லாத உறுதி உடையவனே அரசன் சொல்லியனுப்பிய சொற்களை மற்ற வேந்தர்க்கு உரைக்கும் தகுதியுடையவன்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805, 22072
யாழ்ப்பாணம்.
த. பெ. இல. 22
23-06-1988


## இழுத்தடிக்கும் தந்திரமா?

தமிழ்ப் போராளிகள் ஆயுதங்கள் அனைத்தையும் கையளித்த பின்னரே வடக்கும் கிழக்கும் இணைக்கப்படும், இவ்வாறு அறிவித்திருக்கிறார் அமைச்சர் அத்துலத் முதலி.

அமைச்சரது இந்த நாடாளுமன்ற அறிவிப்பைக் கேட்டதும் இரண்டு கேள்விகள் உடனே எழுகின்றன.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதிகாரப் பரவலாக்கம் ஒரு வழி என்பதால் மாகாணசபைகள் உருவாக்கப்பட்டனவா?

அல்லது —

தமிழ்ப் போராளிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைவது ஒன்றையே நோக்கமாகக் கொண்டு மாகாணசபைகள் உருவாக்கப்பட்டனவா?

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில், போராளிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைவதும் ஓர் அம்சமாக இருக்கிறது என்பது சரி தான்.

ஆனால் வடக்கு - கிழக்கை இணைப்பது, இடைக்கால நிர்வாகத்தை நிறுவுவது, திட்டமிட்ட குடியேற்றத்தை நிறுத்துவது போன்ற எத்தனையோ பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டிய கடமை ஸ்ரீலங்கா அரசுக்கு உண்டு.

ஆனால் அந்தக் கடமைகளை, பொறுப்புகளை, அதில் ஒன்றைத் தானும்தான் நிறைவேற்றாமல் ஆயுத ஒப்படைப்பு ஒன்றையே வலியுறுத்தி, வருகிறது அரசு. தனது கடமைகளைச் செய்வதற்கு ஆயுத ஒப்படைப்புச் செய்தாக வேண்டும் என்ற நிபந்தனையை முன் நிறுத்தி வருகிறது.

இந்தப் போக்கு, தமிழ்ப் போராளிகளை நிராயுதபாணிகளாக்கும் நோக்கத்துடன் மட்டுமே மாகாணசபைத் திட்டம் கொண்டு வரப்பட்டது என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி எடுத்துக்காட்டுகிறது.

பிரஸ்தாப திட்டம் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு போதுமான தீர்வல்ல என்பது எல்லோராலும் ஏற்கப்பட்ட ஒன்று. தமிழர்களுக்கு உள்ள சுயநிர்ணய உரிமையை வழங்கவில்லை என்பதும் மிக வெளிப்படையானது. இப்போது உள்ளதைப் பெற்றுக் கொள்ளுங்கள்; காலப் போக்கில் மேலும் மேலும் பல உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு உண்டாகும் என்றே இந்தியத் தரப்பிலும் கூறப்படுகிறது.

அப்படியிருக்க ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்ட எந்த ஓர் அம்சத்துக்குத் தானும் செயல்வடிவம் கொடுக்காமல் வெறும் காகிதத்தில் எழுத்தில் வைத்துக்கொண்டு, ஆயுத ஒப்படைப்பை மட்டும் முன் நிபந்தனையாக நிறுத்திவருவது தமிழ் மக்கள் மத்தியில் அரசுமீது மேலும் சந்தேகத்தை அதிகரிப்பதாகும்.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகத் தான் ஒப்பந்தம்; மாகாணசபை என்ற உண்மையான நிலைப்பாடு இருக்குமானால், ஒப்பந்த அமுலில் ஒரு பகுதியையேனும் அரசு இதுவரை செய்து காட்டியிருக்க வேண்டும். தமிழர்கள் தன்மீது நம்பிக்கையும், நல்லெண்ணமும் வைக்கவேண்டும் என்று விரும்பியிருந்தால் ஒப்பந்தக் கடமைகளில் சிலவற்றையாவது அது நிறைவேற்றி இருக்கும்.

அவ்வாறு செய்யாது, ஆயுதக் களைவு ஒன்றையே முன்நிபந்தனையாக்கி, தனக்குள்ள கடமைகளைத் தட்டிக் கழித்து வருவது ஒப்பந்த அமுலை இழுத்தடிக்க மேற்கொள்ளப்படும் ஒரு தந்திரம் என்றே கருதவேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையை உருவாக்க வேண்டும், அதற்குரிய தேர்தலை நடத்தவேண்டும் என அரசு உண்மையாகவே நினைக்குமானால், முதலில் இரண்டு மாகாணங்களையும் சட்டரீதியாக இணைக்க வேண்டும்.

அதன் பின்னர், அமைதியை உருவாக்குவது இலகுவாக இருக்கலாம். அமைதியை உருவாக்கித் தான் இணைப்பை அறிவிக்க வேண்டும்என்று இருப்பதைவிட, இணைப்பைச் செயற்படுத்தி அமைதியை நிலைநாட்ட முயன்று பார்த்தால் என்ன?

### கோப்பாய் வடக்கிற்கு

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ரூ.56 ஆயிரம் நிதி உதவி

கோப்பாய் ஜூன் 23

அண்மைக் காலச் சம்பவங்களின்போது கோப்பாய் வடக்கில் எரிந்த குடிசைகளுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் முதற்கட்டமாக ரூபாய் 56 ஆயிரம் கொடுக்கப்பட்டுள்ளது.

குடிசைகள் அமைப்பதற்கென இந்தப் பணத்தில் 56 பேருக்கு தலா ஆயிரம்ரூபாய்ப்படி வழங்க இருப்பதாக பிரஜைகள்குழு செயலாளர் தெரிவித்தார். (சி-72)

### பாகிஸ்தானில்

## சுதந்திரத் தேர்தலை நடத்தாவிடில் வெளித்தலையீடு இடம்பெறலாம்!

### பேனஸிர் பூட்டோ எச்சரிக்கை

இஸ்லாமபாத், ஜூன் 22

பாகிஸ்தானில் வெளிநாட்டுத் தலையீட்டுக்கு இடமுண்டு என்று மக்கள் கட்சித் தலைவி பெனஸிர் பூட்டோ எச்சரித்திருக்கிறார்.

நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் பெனஸிர் பூட்டோ மேலும் சொன்னதாவது;

பாகிஸ்தானில் சுதந்திரப் பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

அதுவும் வெளிநாட்டு அவதானிகள் மேற்பார்வையில் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும்.

இல்லையேல் பாகிஸ்தானில் வெளிநாட்டுத் தலையீடு இடம் பெறும் அபாயம் ஏற்படும்.

பிலிப்பீன்ஸின் மார்க்கோஸின் சர்வாதிகாரப் பிடியில் இருந்து காப்பாற்றி ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தி உதவியது போன்று அமெரிக்க ஜனாதிபதி றேகன் பாகிஸ்தானிலும் ஜனநாயக ஆட்சியைக் கொண்டுவர நேரடியாக உதவ வேண்டும்.

இப்படி பெனஸிர் பூட்டோ மேலும் தெரிவித்தார். (எ)

## அமிர்தசரஸில் ஹர்த்தால்

புதுடில்லி, ஜூன் 22

அமிர்தசரஸில் இன்று (புதன்) ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்துக்கள் இந்த ஹர்த்தாலை ஒழுங்கு செய்திருந்தனர்.

சீக்கியத் தீவிரவாதிகளின் வன்செயல்களைக் கண்டித்து இது ஒழுங்கு செய்யப்பட்டது. (எ)

## பேச்சு

நியூயார்க், ஜூன். 22

ஆப்கன் நிலைமைபற்றி செரில்லாத் தலைவருடன் ஆலோசனை நடத்தவிருப்பதாக அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. (எ)

## உளவாளிகள் வெளியேற்றம்

ஒட்டாவா, ஜூன்22

உளவு பார்த்தார்கள் என்ற குற்றச்சாட்டின் மீது 17 சோவியத் ராஜதந்திரிகளை கனடா அரசு வெளியேற்றிவிட்டது.

கைத்தொழில் மற்றும் இராணுவ விஷயங்கள் குறித்து இவர்கள் உளவு பார்த்தார்கள் என்று கனடா தெரிவித்தது. (எ)

## பொட்ஸ்வானு மீதான தாக்குதல் முறியடிப்பு

கபொரன், ஜூன். 22

பொட்ஸ்வானு மீது தென் ஆபிரிக்க அரசின் கொமாண்டோ படைகளின் தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அத்துடன் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் தென் ஆபிரிக்க படையின் இரண்டு கொமாண்டோக்களை பொட்ஸ்வானுப் பொலிஸார் கைது செய்தனர்.

நிராயுதபாணியாகச் சென்ற பொட்ஸ்வானு பொலீஸ் வாகனம் ஒன்றின் மீது கொமாண்டோக்கள் தாக்குதல் நடத்தினர் என்றும் இதில் 3 பொலீஸார் காயமடைந்தனர் என தெரிவிக்கப்படுகிறது. (எ)

## தாயகம் மீட்கும் கிளர்ச்சியை அடக்க பெருமளவில் பலஸ்தீனியர் கைது!

ஜெருசலம் ஜூன் 22

பலஸ்தீனயர்களின் தாயகம் மீட்கும் கிளர்ச்சியை நசுக்க பெருமளவில் பலஸ்தீனிய குடிமக்களைக் கைது செய்வதில் இஸ்ரவேல் இராணுவம் ஈடுபட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதுவரை சுமார் 17 ஆயிரம் பலஸ்தீனியர் கைது செய்யப்பட்டு தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பலஸ்தீன விடுதலை இயக்க வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் இஸ்ரவேலிய இராணுவ வட்டாரங்களோ, 6ஆயிரம் பலஸ்தீனியர் வரையில் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டிருப்பதாக அறிவித்தன.

கைது செய்யப்பட்டவர்கள் கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் வசித்து வந்தவர்கள் என்று தெரிவிக்கப் பட்டது.

இதனிடையில் அரபுப் பிரதேசத்தில் பணியாற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு இஸ்ரவேல் அரசு புதிய அதிகாரங்களை வழங்கி உள்ளது.

ஒருவரைக் கைது செய்தவுடன் 6மாத காலங்களுக்குத் தடுத்து வைக்கும் உத்தரவைப் பிறப்பிக்கும் அதிகாரம் இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுளளது.

அதே வேளையில் புதிய தடுப்பு முகாம்களை நிறுவுவதிலும் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

இஸ்ரவேல் பிரதேசத்தில் இம்முகாம்கள் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதை பலஸ்தீன விடுதலை இயக்கம் ஆட்சேபித்துள்ளது.

ஜெனீவா கைதிகள் உடன்பாடு கைது செய்யப்படுபவர்கள் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில்தான் காவலில் வைக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது.

## ஹெய்டி தீவில் இராணுவ ஆட்சி!

போர்ட்-ஒ- பிரின் ஜூன் 22

கரிபியன் தீவான ஹெய்டியில் நான்கு மாத கால சிவிலியன் ஆட்சி கடந்த திங்களுடன் முடிவுக்கு வந்தது.

மக்களினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி லெஸ்லி மனிக்கற்றினால் பதவி நீக்கம் செய்யப்பட்ட இராணுவத் தளபதி நாபி என்பவர் நடத்திய ஆயுதப் புரட்சியைத் தொடர்ந்து மீண்டும் ஹெய்தியில் இராணுவ ஆட்சி ஏற்பட்டது.

பதவி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி மனிகற் டொமினிக்கன் தீவுக்கு, இராணுவ ஆட்சியாளரால் அனுப்பி வைக்கப் பட்டார்.

அங்கிருந்து அவர் வெனிஸுலா நாட்டுக்குச் செல்வார் என்று அறிவிக்கப்படுகிறது.

இதனிடையில் தானே ஜனாதிபதி என்று ஜெனரல் நாபி, தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டார்.

தனது தலைமையில் அமைச்சரவை ஒன்றும் நியமிக்கப்பட்டிருப்பதாக அவர் டெலிவிஷன் உரையில் தெரிவித்தார்.

ஜனநாயகத்தைக் காப்பாற்றவே இராணுவ ஆட்சி ஏற்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

## பர்மாவில் பல்கலைக்கழக மாணவர்-பொலீஸ் மோதல்!

ரங்கூன், ஜூன் 22

பர்மாவில் பல்கலைக் கழக மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு வருவதாக அறிவிக்கப் படுகிறது.

கடந்த திங்கட்கிழமை நடந்த பொலீஸார் மாணவர் மோதலில் ஐந்து பொலீஸாரும் ஒரு மாணவனும் கொல்லப் பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ரங்கூன் பல்கலைக் கழக மாணவர் கடந்த மார்ச் மாதம் நடத்திய கிளர்ச்சியில் இறந்த மாணவருக்கு அஞ்சலி செய்யுமுகமாக நேற்று முன் தினம் ஊர்வலமாக நகரின் மத்திய பகுதிக்குச் சென்றனர்.

சுமார் ஆயிரம் மாணவர் இந்த ஊர்வலதில் கலந்து கொண்டனர். அச்சமயம் அந்த இடத்துக்கு வந்த 200 க்கு அதிகமான கலகம் அடக்கும் பொலீஸார் மாணவரைச் சுற்றி வளைத்தனர்.

இதைத் தொடர்ந்து ஐயாயிரத்துக்கு அதிகமானோர் பொலீஸாரைத் தாக்க ஆரம்பித்தனர்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டபோது பொலீஸாரில் ஐவரும் மாணவரில் ஒருவரும் உயிரிழந்தனர் என்று ரங்கூன் வானொலி தெரிவித்தது.

கலவரம் தீவரமடைந்ததைத் தொடர்ந்து ரங்கூனில் அடுத்த 60 தினங்களுக்கு மாலை முதல் காலைவரை ஊரடங்குச் சட்டம் தினசரி அமுல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

## தற்போதைய நிலை நீடித்தால் ஸ்ரீலங்கா அரசுக்கே சாதகமாகிவிடும்

### பாலகுமார் பேச்சு

வடமராட்சி, ஜூன்23

தற்போதைய நிலைமை நீடிக்குமானால் ஸ்ரீலங்கா அரசுக்கு அது சாதகமாகிவிடும்.

ஈரோஸ் பிரமுகர் பாலகுமார் இப்படிக் கூறினார்.

வடமராட்சியில் நடைபெற்றவீதி மறியல்போராட்டம், ஊர்வலத்தின் பின்நெல்லியடிச்சந்தியில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. பாலகுமார் உரையாற்றினார்.

பாலகுமார் மேலும் பேசியதாவது:-

இந்தியா இங்கு வர வேண்டும் என விரும்பியவர்கள் தமிழ்மக்கள்.

தமது பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என இந்தியாவிடம் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

நாம் உத்தியோகபூர்வமாக விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் கையொப்பத்துடன் பேச்சு வார்த்தைக்குத் தயார் என்னும் ஒப்புதல் கடிதத்தை இந்திய அரசிடம் அனுப்பி வைத்தோம்.

இந்திய அரசும் தயார் என எமக்குப் பதில் கடிதம் அனுப்பியது. ஆனால் ஏனோ அது காலத்தைக் கடத்தி வருகின்றது.

இதில் இருந்து பேச்சு வார்த்தையை யார் விரும்பவில்லை என்பதை நாம் சந்தேகக் கண் கொண்டு பார்க்கின்றோம்.

இன்று மக்கள் விரும்புவது அமைதியே அதற்கு முதல் தேவையானது உடனடிப் போர் நிறுத்தம். நியாயபூர்வமான பேச்சுவார்த்தை.

எமது மக்களுக்கு இன்றும் ஏற்பட்டுவரும் இன்னல்கள் அவமானங்கள் துன்புறுத்தல்களுக்கு யார் காரணம் என்று கேள்விக்கு அமைதிப் படையினர் பதில் இறுப்பார்களா?

இது மேலும் தொடருமானல் அது ஸ்ரீலங்கா அரசுக்கே சாதகமாக அமையும் என்பதை இந்தியாவும் அமைதிப்படையினரும் உணரவேண்டும்.

நியாய பூர்வமான பேச்சு வார்த்தைக்கும் அமைதிக்கும் உடன் பட உடனடியாகப்போர் நிறுத்தத்தைக் கொண்டு வரவேண்டும்.

நாம் இன்று இந்திய அரசிற்கும் இந்திய அமைதிப் படைக்கும் விடும் அமைதியான வேண்டுகோள் இது தான் உடனடிப் பேச்சு வார்த்தை உடனடிப் போர் நிறுத்தம் உடனடி அமைதி இவை மூன்றும் நிறைவேற நாம் துணிந்து என்றும் எமது பங்களிப்பைச் செய்வோம் இப்படி அவர் கூறினார். [தி-160]

## தமிழ்ப் பிரதேசங்கள் பறிபோவதைக் காட்டவே கறுப்புப் பட்டிப் போராட்டம்

முல்லைத்தீவு, ஜூன்23

1947ஆம் ஆண்டுமுதல் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் சிங்களக் குடியேற்றங்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்தி வந்தது. எமது தாயகமான கொக்கிளாய்ப்பகுதியை வெலிஓயாத் திட்டமாக அரசாங்கம் பிரகடனம் செய்து சிங்களவர்களைக் குடியேற்றி உள்ளது. எனவேதான் அரசாங்கத்தின் திட்டமிட்ட செயலைக் கண்டிக்கவும் எமது தமிழ்ப் பிரதேசங்கள் எப்படிப் பறிபோகின்றன என்பதை வெளிநாடுகளுக்குக் காட்டவும் இந்தக் கறுப்புப் புப்பட்டிப் போராட்டத்தைஆரம்பித்தோம்.

முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள்குழுவின் தலைவர் திரு. பொன். சந்திரசேகரி முல்லைத்தீவில் நடந்த கறுப்புப்பட்டிப் போராட்ட முடிவில் நடந்த பொதுக்கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

''வெலிஓயாவில் சிங்களக் குடியேற்றம் கொக்கிளாயில் தமிழர் வெளியேற்றம்'' என்பன போன்ற பல கோஷங்களை ஊர்வலத்தில் கலந்துகொண்ட மாணவ மாணவிகள் கோஷித்தனர்.

கூட்டத்தில் திரு. வே. துரைரத்தினம் திரு. முத்து சுப்பிரமணியம். [illegible] (இ-92)

## போத்தல் யமனானது

மட்டுவில் தெற்கு குமாரவேலு லோகராசா என்பவர் கீழே விழுந்த போது இடுப்பில் செருகி இருந்த போத்தல் உடைந்து வயிற்றில் குத்தியது.

அதிக அளவிலான இரத்தப் பெருக்கால் அவர் மரணமானார்.

## ஆசிரியர் நியமனங்கள் தொடர்பாக ஆணையாளர் விடுத்துள்ள அறிக்கை

யாழ்ப்பாணம் ஜூன் 23

தற்போதைய ஆசிரியர் நியமனங்களுக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று யாழ் மாநகர ஆணையாளர் திரு.சி.வி.கே. சிவஞானம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அறிக்கை விபரம் வருமாறு:-

''தற்போது இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுவரும் ஆசிரிய நியமனம் தொடர்பாக எனது பெயரும் சில இடங்களில் பிரஸ்தாபிக்கப்படுவது எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இது விடயமாகப் பொதுமக்களுக்கு முக்கிய விடயமொன்றை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

நான் ஒரு ஆசிரியனல்ல; நான் எந்தவொரு ஆசிரிய சங்கத்திலும் எந்தவொரு பதவியையும் வகிப்பவனுமல்ல; ஆசிரிய நியமனங்கள் தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்படும் சிவஞானம் நானல்ல.

அப்படியான எவருக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது.''

[illegible] (இ)

## கல்வியின் வெற்றி ஒரு சிலரினால் நிர்ணயிக்கக் கூடியதல்ல

கோப்பாய் ஜூன் 23

கல்வியின் வெற்றி ஒருவரால் அல்லது ஒரு சிலரால் நிர்ணயிக்கக்கூடியது அல்ல. இன்றைய தினம் நடைபெற்ற நிகழ்ச்சிகள் உங்களுக்கு இதனை உணர்த்துகின்றன.

கோப்பாய் கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர் பூ.க. இராசரத்தினம் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கோப்பாய் கொத்தணிப் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியில் அவர் உரையாற்றினார்.

கோப்பாய் வட்டாரத்திலுள்ள பத்துப் பாடசாலை மாணவர்களும் சேனாதிராஜா, சபாபதி நாவலர், இராசரத்தினம் என மூன்று இல்லங்களாக பிரித்து போட்டிகளில் பங்கு கொண்டனர்.

போட்டியில் பிரதம விருந்தினராக பிரதம கல்வி அதிகாரி திரு. க. கந்தசாமி கலந்து கொண்டு பேசுகையில் ''பாடசாலை ஒரு ரியூசன் சென்ரர் அல்ல. உங்கள் வாழ்க்கை பழக்க வழக்கங்களே இங்கு முக்கியமாக கருதப்படுகின்றன'' என்றார்.

போட்டிகளின் முடிவில் சபாபதி நாவலர் இல்லம் 443 புள்ளிகளை பெற்று இவ்வாண்டுச் சம்பியனாயிற்று. சேனாதிராஜா, இராசரட்ணம் இல்லங்கள் முறையே இரண்டாம் மூன்றும் இடங்களைப் பெற்றுக் கொண்டன.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்க்கான பரிசில்களை பிரதம கல்வி அதிகாரி க. கந்தசாமி வழங்கினார்.

இவ் விழாவில் கோப்பாய் வடக்கு பிரஜைகள் குழுச் செயலாளர், ஆசிரியர் செ. நவரத்தினம், கொத்தணிஅமைப்பின்செயலாளர் பி. இராசரத்தினம் ஆகியோரும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினர். (இ-72)

## சமய சந்திகளில்

### நவாலி ஸ்ரீ ஞானவைரவர் உற்சவம்

நவாலி ஜூன் 23

நவாலி குளத்தடி ஸ்ரீ ஞான வைரவர் கோயில் அலங்கார உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை 24 ஆம் திகதி ஆரம்பமாகி ஜூலை 3 ஆம் திகதி முடிவடையும்.

தினமும் மாலை 4 மணிக்கு அபிஷேகத்துடன் பூசைகள் ஆரம்பமாகும்.

3 ஆம் திகதி காலை 9 மணி முதல் அஷ்டோத்தர சத (108) சங்காபிஷேகமும் மாலை 3 மணிக்கு வருடாந்த பொங்கலும் நடைபெறும். (-இசி)

### கும்பாபிஷேகம்

கோப்பாய் ஜூன் 23

வடகோவை கண்ணகை அம்மன் கோயிலில் சண்டேஸ்வரி கும்பாபிஷேகம் வருகிற சனிக்கிழமை 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (சி-72)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

★ சேட்டிங் ★ சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கும்
யாழ்நகரில்

மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :: யாழ்நகர்.

# உதயன்

23 - 06 - 1988 வியாழக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
● மணிப்புரி ● பெனரஸ்
● காஞ்சிபுர
சேலைகளைப் பெற்றுக்கொள்ள

மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை, :-: யாழ்நகர்.




ஹரன்-யாழ்நகர்-வெண்திரையில்!
தினசரி 10-30, 2-30 மட்டும் - புதிய வெளியீடு!
2வது ஜனத்திரள் வாரமாக காட்சியளிக்கிறது!
சிரஞ்சிவி... விஜயசாந்தி... சில்க்...
பந்தயம்
[வண்ணப்படம்] (4804)

## ஒய்வூதிய.....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

திலேயே இந்த ஓய்வூதிய அதிகரிப்பானது வழங்கப்பட்டிருந்தது கடந்த ஜனவரி மாதம் முதல் இந்த புதிய ஓய்வூதியத் தொகை வழங்க அனுமதிக்கப்பட்ட போதிலும் இம்மாதம் வரை பழைய அடிப்படையிலேயே ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது.

தற்பொழுது ஜனவரி மாதம் முதல் மே மாதம்வரை நிலுவையாக உள்ள இந்த அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியத்துக்கான நிலுவையை இம் மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஆகக் குறைந்த மதிப்பீட்டின் படி ஆயிரம் ரூபாவரையான தொகையை ஓய்வூதியமாகப் பெறும் ஒருவர் மாதம் ஒன்றிற்கு 200 ரூபா வீதம் 1200 ரூபா வரையான தொகையை நிலுவையாகப்பெற்றுக்கொள்ள முடியும்.

ஓய்வூதியம் அதிகரிக்க நிலுவையும் அதிகரித்து காணப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-9)

## 'காற்றினிலே பேசுவோம்'

யாழ்ப்பாணம் ஜூன் 23

எம். ஏ. நுஃமான் நெறியாள்கையில் 'காற்றினிலே பேசுவோம்' என்ற தலைப்பில் கவியரங்கு ஒன்று இன்று வியாழக்கிழமை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மாலை 3 மணியளவில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களின் எட்டுக் கவிஞர்கள் அரங்கேறவுள்ளனர். தமிழ் மன்றம் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. (ஓ - 5)

## யாழ் செயலகத்தில் இயங்கி வந்த
# பதிவாளர் பிரிவுகள் நக்கா வீதி அலுவலகத்தில்

யாழ்ப்பாணம், ஜூன்23

இதுவரை காலமும் யாழ். செயலகத்தில் இயங்கி வந்த பதிவாளர் அலுவலகத்தின் சில பிரிவுகள் நேற்று முதல் 79, நக்கா வீதியில் உள்ள காணிப்பதிவாளர் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை யாழ் மாவட்டப் பதிவாளர் எல். ராசையா உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ் செயலகத்தில் இயங்கிவரும் பதிவாளர் காரியாலயத்தில் இதுவரை காலமும் பிறப்பு, இறப்பு, விவாகப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது.

ஆனால் தற்பொழுது இந்த விண்ணப்பங்களை பதிவு செய்து ஏற்றுக் கொள்ளும் பணி காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் புதிய நடைமுறையினால் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து விட்டு சென்றுவிடவேண்டியது மட்டுமே, பின்னர் அவர்களுக்கான பிறப்பு, இறப்பு, விவாக-அத்தாட்சிப் பத்திரங்கள் தபாலில் அனுப்பப்படும்.

எனவே செயலகத்திலுள்ள பதிவாளர் பிரிவுக்கு விண்ணப்பதாரர்கள் இனி வரத் தேவையில்லை.

என்று அவர் மேலும் தெரிவித்தார். [ஓ-9]

## வவுனியா.......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மனைவியார் தேவைந்திறக்க மறுத்ததும் வவுனியாவில் உள்ள இந்திய அமைதிப்படையைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவரின் பெயரை கூறி அவர் வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டதாம். எனினும் கதவு திறக்கப்படவில்லை.

இது விடயம் தொடர்பாக இலங்கை-இந்திய படையினைச் சேர்ந்த மேலதிகாரிகளிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. இந்திய படையினர் டாக்டர் பராஜசிங்கம் வீட்டிற்குச் செல்லவில்லை என மறுத்திருக்கிறார்கள்.

அரசியல் பிரமுகர் ஒருவர் வாடிவீட்டில் இருப்பதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்தே இத்தேடுதல் நடைபெற்றதாகப் பேசப்பட்டது. ஆனால் அமைதிப்படையினர் எதனையும் ஊர்ஜிதம் செய்யவில்லை.

எனினும் விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்டவர்கள் அனைவரும் செவ்வாயன்று மாலை விடுதலை செய்யப்பட்டார்கள். (அ-131)

யாழ். கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின்

## ஆங்கிலச் சுருக்கெழுத்து/ தட்டெழுத்து பயிற்சிநெறி

யா/அளவெட்டி அருணோதயா கல்லூரி

இப்பயிற்சி நெறி எதிர்வரும் 4-7-88 திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளது. நேர்முகப் பரீட்சையும் ஆங்கிலமொழித் தகுதிகாண் பரீட்சையும் எதிர்வரும் 28-6-88 செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது. இப்பயிற்சி நெறியில் பயில விரும்புபவர்களும் ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும் பின்வரும் ஆவணங்களுடன் நேரில் வரவும்.

1. பிறப்புச் சான்றிதழ்
2. கல்வித் தகைமைச் சான்றிதழ்

★ ஆங்கில மொழியில் குறைந்தது சாதாரண சித்தியாவது பெற்றிருத்தல் அவசியம்.

(சான்றிதழ்கள் கைவசம் இல்லாதவர்கள் தகுந்த காரணத்துடன், பயிற்சிக் காலத்தில் சமர்ப்பிக்கலாம்)

(4820) -அதிபர்

## சகல.....

ரிக்கையை சகல இயக்கங்களும் புரிந்துணர்வு அடிப்படையில் விளங்கிக் கொள்ளும் என்று எதிர்பார்க்கின்றோம்.

எமது போராட்டத்தில் அரசியல் காலஎல்லையை நாம் எட்டிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் சகல இயக்கங்களும் ஒன்றிணைவதால் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை ஒன்றிணைந்து மீட்டெடுக்கலாம் - என்று கூறப்பட்டுள்ளது. (ஓ-164)

## சுன்னாகம் தயா மரக்காலை

சுன்னாகம் மயிலணிக் கந்தன் சித்திரத்தேர் தொடர்பாக 21-06-88 உதயன் முதலாம் பக்கத்தில் வெளிவந்த விளம்பரத்தில் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் தயா மரக்காலை கே. கே. எஸ். வீதி சுன்னாகம் என்பதே சரி ஆகும்.

சுன்னாகத்துக்குப் பதில் தவறுதலாக யாழ்ப்பாணம் என்று பிரசுரமாகி விட்டது.

## தமிழர்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றிக் கொண்டு தமிழ்ப் போராளிகளுக்கும் சிங்கள அரசுக்கும் இடையே நேரடிச் சந்திப்பை ஏற்படுத்தி பிரச்சினைக்கு இருதரப்பினரும் ஒப்புக் கொள்ளும் ஒரு தீர்க்கமான நல்ல முடிவை ஏற்படுத்தும் ஒரு சக்தியாக மாறிச் செயல்படவேண்டும். (அ)

## ஹர்த்தாலுக்கு--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்டன் நகுலனின் 30 ஆவது நினைவு நாளை முன்னிட்டே ஹர்த்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அந்த பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-5)

## ராஜா புக்கிங் சென்ரர்

யாழ்—கொழும்பு (வெள்ளவத்தை வரை)
யாழ்—மட்டுநகர் (கல்முனைவரை)
யாழ்—கண்டி (மாத்தளை)

ஆகிய இடங்களுக்கு ஆசனங்களை 'ராஜா புக்கிங்' சென்ரரில் பதிவுசெய்து உங்கள் பயணங்களை இலகுவாக்குங்கள்

சொகுசு பஸ்கள்: V. R. V.
K. S. B.
சேவ்ரி
மினி பஸ்கள்: நிமால்
ஒலிம்பிக்
S.K.
A.M.R.
V.R.V.
R.B.

பதிவு செய்யுமிடம்:

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்.
(சி5517)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா இராசரத்தினம்

கந்தையா இராசரத்தினம், யாழ்ப்பாண புகையிரத நிலைய அதிபர் (பொதிகள்) 22 - 06 - 88 காலமாகிவிட்டார் இவர் அன்பு மலரின் (இளைப்பாறிய ஆசிரியை C. C. T.M கொக்குவில்) அன்புக்கணவரும், தேவரஞ்சன் (Hatton National Bank, Trincomalee) ஜெயந்தி, ஜெயரஞ்சனின் தந்தையும், அன்புராசா (இளைப்பாறிய தொழிற் திணைக்கள உத்தியோகத்தர்) வின் மைத்துனரும் ஆவார்.

பிரேத அடக்க ஆராதனை அவரது தாவடிப் பிள்ளையார் கோவில் ஒழுங்கையில் உள்ள இல்லத்தில் 23 - 6 - 88 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
செ. ஜெயரத்தினம்.
(சகோதரன்)

(4829)

### திருமதி சங்கரப்பிள்ளை பூரணம்

திருமதி சங்கரப்பிள்ளை பூரணம் காலமானார். இவர் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும் கௌரியம்மாவின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற மாணிக்கத்தின் மாமியாரும் ரவீந்திரன் (கனடா), ரவிச்சந்திரன் (நல்லூர் பகவான் ஸ்ரீ சத்திய சாயி இல்ல பொறுப்பாளர்) ஆகியோரின் பேத்தியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 4 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மா. ரவிச்சந்திரன்
308, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (4527)

### முருகுப்பிள்ளை சபாரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மயிலிட்டி 6ஆம் வட்டாரத்தைச்சேர்ந்த திரு. முருகுப்பிள்ளை சபாரத்தினம் அவர்கள் 22-6-88 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை புதுநாச்சன் ஆகியோரின் அன்பு மகனும், மயில்வாகனம் செல்லம்மாவின் மருமகனும், ராசமலரின் அன்புக்கணவரும், ரவீந்திரன், ரஜீந்திரா, நிருபா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் பூதவுடல் 23-6-88 நண்பகல் 1 மணிக்கு மயிலிட்டி குடும்ப மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. இராஜசிங்கம்

( 4528 )

### திருமதி நவரத்தினம் இரத்தினமலர்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த நவரத்தினம் (M.N) அவர்களின் அன்பு மனைவி இரத்தினமலர் சிவபதமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி கணபதிப்பிள்ளையின் அன்பு மகளும், திருமதி சாந்தினி தேவராஜசிங்கம், திருமதி மனோகரி சாந்திகுமார், மனோகரன் (மோகன்) அவர்களின் அன்புத் தாயாரும், திருமதி இரஞ்சித மலர்குணரத்தினம், காலஞ்சென்ற ராணிமலர் திரு. பாலசுப்பிரமணியம், திருமதி இந்திர மலர் மகாலிங்கம் அவர்களின் பிரிய சகோதரியும், தேவராஜசிங்கம், சாந்திகுமார் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (கலைவாணி அரிசி ஆலை), திருமதி பவளம்மா சோமசுந்தரம், திரு. சண்முகரத்தினம், திருமதி பாலசுப்பிரமணியத்தின் மைத்துனியுமாவார். அன்னாரது ஆத்மசாந்திக் கிரியைகள் 23-6-88 வியாழக்கிழமை பிற்பகல் கலைவாணி மில் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று மாலை 5-00 மணியளவில் கொக்குவில் மயானத்தில் ஈமக்கிரியைகள் நடைபெறும்.

(4827) தகவல்: மு. நவரத்தினம் (M.N)

## 16ம் நாள் நினைவஞ்சலி



### செல்வன் தர்மலிங்கம் இராதாகிருஷ்ணன் (பஞ்சு)

அன்னையின் அணைப்பில்: 1969. 10. 14
ஆண்டவன்: அணைப்பில்: 1988. 6. 8
திதி: 23. 6. 1988

நாளது பதினாறு சென்றாலும் மகனே!
நாமின்னும் ஆறவில்லைச் செல்வமகனே!!
நாவரண்டு அழுகின்றோம்
நம் மனமோ ஆறவில்லை
"பஞ்சு" என்று நாமணைத்து
கண்ணிமைபோல் காத்தோமடா - யாவும்
இலவு காத்த கிளியது கதையாக்கி
இறையடி சேர்ந்தனையே!

1988- 6- 8 அன்று அகால மரணமெய்திய பஞ்சுவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போர்:

ஆருயிர் அப்பா, அம்மா,
பாசமிகு அண்ணா, அக்கா
நேயமுடன் தம்பிமார்,
உற்றார், உறவினர், நண்பர்கள்

கண்டி வீதி,
கொடிகாமம்.
(4825)

இப்படிக்கு
சு. தர்மலிங்கமும்
குடும்பத்தினரும்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அன்னபூரணம் சோமசுந்தரம் B. A

தோற்றம்: 1-9-1923
மறைவு: 5-7-1987
திதி: 23-6-1988

எங்கள் அன்புத் தெய்வமே, ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை எம் மனது; மாறவில்லை உங்கள் நினைவு: என்றும் எங்கள் உள்ளத்தில் உலாவி வருவீர்கள் தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கும்.

கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

வேம்பன் வீதி,
உரும்பிராய். [4525]

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



### வெங்கடேஸ் (ஜீவாகரன்)

ஈழ மண்ணில்: 01-04-1968
அநியாய அழிப்பில்: 10-05-1988

### நவாஸ் (ரஸ்வரஜீவா)

ஈழ மண்ணில்: 24-10-1962
அநியாய அழிப்பில்: 10-05-1988

தமிழர்தம் மண்மீட்க புறப்பட்ட
நானைத் தளபதியாம் வீரவேங்கை தம்பி
அவ்வழி சிறந்ததென புறப்பட்ட
வீரவேங்கைகளாம், வெங்கடேசும் நவாசும்
களம்பல கண்டீர் எதிரிதலை பலசொய்தீர்
இறுதி மூச்சு உள்ளவரை இணைந்து
நின்றே போரிட்டீர்.
காப்பான் எனநாம் நினைத்திருந்தோம்
காலன் உருவில் வந்து நின்றான்
அன்பாய் பண்பாய் பழகி வந்தீர்
அன்னையும் பிதாவும் மறந்து சென்றீர்
ஈழம் ஒன்றே இறுதியென
இணைந்து நின்றீர் உறுதியென
இலட்சியம் என்றும் மடிவதில்லை
களவீரர்கள் என்றும் மாண்டதில்லை
உறுதி எங்கள் இலட்சியமே
என்றும் எங்கள் இதயத்திலே
வளர்க உங்கள் நினைவுகளே.

(4648) இன்பருட்டி நண்பர்கள்

இப்பத்திரிகை நியு உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 23 - 06 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2, Navalar Road, Jaffna Thursday 23 rd June 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org